

பெரம்பலூர் மாவட்டம், ஆலத்தூர் மேற்கு ஒன்றிய கழக பொறுப்பாளர் டாக்டர் செ.வல்லபன் தாயார் சாராதாம்பாள் என்பவர் கடந்த 14.01.2025 அன்று மறைவெய்தினார். பெரம்பலூர் வடக்கு மாதவி சாலையில் உள்ள தனியார் திருமண மண்டபத்தில் அவரது உருவப்படம் திறப்பு விழா மற்றும் நினைவேந்தல் நிகழ்ச்சி நடைபெற்றது. மேனாள் ஒன்றிய அமைச்சர் கழக துணைப் பொதுச்செயலாளர் ஆ.இராசா. எம்.பி. போக்குவரத்துத் துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர் கலந்து கொண்டு மறைந்த சாரதாம்பாள் உருவப்படத்தை திறந்து வைத்து, மலரஞ்சலி செலுத்தினார்கள். இதில் பெரம்பலூர் சட்டமன்ற உறுப்பினர் எம்.பிரபாகரன், பெரம்பலூர் சட்டமன்ற தொகுதி பார்வையாளர் தங்க.சித்தார்த், மாவட்ட கழக முன்னாள் செயலாளர் குன்னம் சி.இராஜேந்திரன், மாநில ஆதிதிராவிடர் நலக்குழு துணைச் செயலாளர் பா.துரைசாமி மற்றும் கழக நிர்வாகிகள் ஏராளமானோர் கலந்துகொண்டனர்.



நாகை மாவட்டம் திருமருகல் ஊராட்சி ஒன்றியம் வாழ்குடி ஊராட்சி தண்ணீர்பந்தல் கிராமத்தில் ஊரக வளர்ச்சித்துறை சார்பில் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியின் கீழ் பயணியர் நிழலக கட்டடத்தினை நாகை மாவட்ட பொறுப்பு அமைச்சரும், பள்ளி கல்வித்துறை அமைச்சருமான அன்பில் மகேஸ் பொய்யாமொழி திறந்து வைத்தார். உடன் , தமிழ்நாடு மீன்வளர்ச்சி கழக தலைவர் .என்.கௌதமன்,மாவட்ட ஆட்சித்தலைவர் ப.ஆகாஷ் தாட்கோ தலைவர் உ.மதிவாணன், நாகை சட்டமன்ற உறுப்பினர் தஜெ.முகம்மது ஷா நவாஸ், திருமுருகல் தெற்கு ஒன்றிய செயலாளர் ஆர்டிஎஸ் சரவணன் மாவட்ட நெசவாளர் அணி அமைப்பாளர் இளம்.சுந்தர் ஆகியோர் உள்ளனர்.

### முதல்வர் பிறந்த நாள் : 2026 சட்டமன்றத் தேர்தல்:

# கழக இலக்கிய அணி சார்பில் ஆலோசனைக் கூட்டம்!

## இலக்கிய அணிச் செயலாளர் வி.பி.கலைராஜன் வேண்டுகோள்!

சென்னை, பிப்.15-

மார்ச் 1 - கழகத் தலைவர் அவர்களின் பிறந்தநாள் விழாவை சிறப்பாகக் கொண்டாடுவது குறித்தும், வருகிற 2026 சட்டமன்றத் தேர்தல் பணிகளை எவ்வாறு ஒருங்கிணைத்து பணியாற்றி கழகத்திற்கு வெற்றிகளைப் பெற்றுத் தருவது குறித்தும் ஆலோசித்திட நடைபெறும் கழக இலக்கிய அணியின்



ஆலோசனைக் கூட்டத்தில் சம்பந்தப்பட்ட நிர்வாகிகள் அனைவரும் தவறாது கலந்து கொண்டு சிறப்பிக்குமாறு இலக்கிய அணியின் செயலாளர் வி.பி.கலைராஜன் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இதுகுறித்து வி.பி.கலைராஜன் விடுத்துள்ள வேண்டுகோள் வருமாறு:-

வருகிற 20.2.2025 வியாழக்கிழமை மாலை 4.00 மணிக்கு அன்பகம் சென்னையில் எனது தலைமையில் கழக இலக்கிய அணி சார்பாக முதல்வர் அவர்களின் பிறந்தநாள் சம்பந்தமாகவும், வரவிருக்கும் 2026 சட்டமன்ற தேர்தல் சம்பந்தமாகவும் நம்முடைய இலக்கிய அணியின் பணி என்ன என்பதை பற்றி கலந்து ஆலோசிக்க முடிவெடுக்கப்படவுள்ளது.

அதில் மாநில இலக்கிய அணி நிர்வாகிகள், மாவட்ட இலக்கிய அணி அமைப்பாளர்கள், மாநகர இலக்கிய அணி அமைப்பாளர்கள் அவசியம் தவறாமல் கலந்துகொண்டு தங்கள் ஆலோசனையை வழங்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். கண்டிப்பாக அவசியம் வரவும்.

இவ்வாறு வி.பி.கலைராஜன் வேண்டுகோள் விடுத்துள்ளார்.



கழக இளைஞரணி செயலாளர், தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு புதுக்கோட்டை வடக்கு மாவட்ட தி.மு.க. மற்றும் ஒருங்கிணைந்த விராலிமலை ஒன்றியங்கள் சார்பில் விராலிமலை செக்போஸ்டில் "கோடைகால தண்ணீர் பந்தல்" மாவட்டக் கழகச் செயலாளர் வழக்கறிஞர் கே.கே.செல்லபாண்டியன் தலைமையில் விராலிமலை சட்டமன்ற தொகுதி பார்வையாளரும் தஞ்சாவூர் துணை மேயருமான டாக்டர் அஞ்சுகம் பூபதி முன்னிலையில் விராலிமலை ஒன்றிய முன்னாள் பெருந்தலைவர் முபி.மணி திறந்து வைத்தார். நிகழ்வில் ஒன்றிய செயலாளர்கள் கே.எஸ்.சந்திரன், மு.பி.ம.சத்தியசீலன், அ.இளங்குமரன், கே.பி.அய்யப்பன், ஆர்.ஆர்.எஸ். மாரிமுத்து, ஓ.எஸ்.வெங்கடாசலம், பொதுக்குழு உறுப்பினர் ராப்பூசல் எம்.செந்தில் குமார் உள்ளிட்ட கழக நிர்வாகிகள் மற்றும் பொதுமக்கள் பங்கேற்றனர்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### குறிச்சி இரா. நாகராசன்
### பிப்ரவரி 15 (2005)



கோவை மாவட்டம், குறிச்சி பேரூர் கழகமாக இருந்தபோது, சுந்தராபுரம் கிளைப் பொருளாளராக பணியாற்றத் தொடங்கி, பேரூர் ஒன்றிய அவைத் தலைவர், குறிச்சி பேரூர் செயலாளராகவும், பின்னர் குறிச்சி நகரமான பிறகு, நகரச் செயலாளர், தலைமைச் செயற்குழு உறுப்பினர், மாவட்டப் பொருளாளர் என பல்வேறு பொறுப்புகளை வகித்து கழகப் பணியாற்றியவர்.

குறிச்சி நகராட்சித் தலைவராக கழகத்தின் சார்பில் தேர்ந்தெடுக்கப்பட்டு, சிறப்பாக பணியாற்றி அப்பகுதி மக்களின் மனதில் இடம் பிடித்தவர்.

கழகம் அறிவித்த அனைத்துப் போராட்டங்களிலும் பங்கேற்று சிறை சென்றவர்.

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**

### நிவேதா எம்.முருகன் எம்.எல்.ஏ. முன்னிலை! எம்.பன்னீர்செல்வம் எம்.எல்.ஏ. பங்கேற்பு! மயிலாடுதுறை மாவட்டம் –

# சந்திரப்பாடியில் ரூ.32 கோடி மதிப்பீட்டில் மீன்பிடி இறங்குதளம்!

## அமைச்சர் சிவ.வீ.மெய்யநாதன் அடிக்கல் நாட்டினார்!

மயிலாடுதுறை. பிப். 15-

மயிலாடுதுறை மாவட்டம் செம்பனார்கோவில் ஒன்றியம் சந்திரப்பாடி கிராமத்தில், மீன்வளம் மற்றும் மீனவர் நலத்துறை சார்பில்; ரூ.32 கோடி மதிப்பீட்டில் மீன்பிடி இறங்குதளம் அமைப்பதற்கானகட்டுமானப் பணியை பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அமைச்சர் சிவ.வீ.மெய்யநாதன் அடிக்கல் நாட்டி, பணிகளைத் தொடங்கிவைத்தார்.

மயிலாடுதுறை மாவட்டம், செம்பனார்கோவில் ஒன்றியம் சந்திரப்பாடியில் மீன்வளம் மற்றும் மீனவர் நலத்துறை சார்பில் ரூ.32 கோடி மதிப்பீட்டில் மீன்பிடி இறங்குதளம் அமைப்பதற்கான கட்டுமானப் பணி அடிக்கல் நாட்டு விழா நடைபெற்றது.

விழாவிற்கு மயிலாடுதுறை மாவட்ட ஆட்சித்தலைவர் ஏ.பி. மகாபாரதி தலைமை தாங்கினார்.மயிலாடுதுறை மாவட்ட கழக செயலாளரும், பூம்புகார் சட்டமன்ற உறுப்பினருமான நிவேதா எம்.முருகன், சீர்காழி சட்டமன்ற உறுப்பினர் எம்.பன்னீர் செல்வம் ஆகியோர் முன்னிலை வைத்தனர்.

விழாவில் பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அமைச்சர் சிவ.வீ.மெய்யநாதன் கலந்து கொண்டு சந்திரப்பாடியில் மீன்வளம் மற்றும் மீனவர் நலத்துறை சார்பில் ரூ.32 கோடி மதிப்பீட்டில் மீன்பிடி இறங்குதளம் அமைப்பதற்கான கட்டுமானப் பணி அடிக்கல் நாட்டி, பணிகளைத் தொடங்கி வைத்து பேசுகையில்

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைக்கிணங்க, மயிலாடுதுறை மாவட்டம், தரங்கம்பாடி வட்டத்திற்குட்பட்ட சந்திரப்பாடி கிராமத்தில், மீன்வளம் மற்றும் மீனவர் நலத்துறை சார்பில் ரூ.32 கோடி மதிப்பீட்டில் மீன்பிடி இறங்குதளம் அமைப்பதற்கான கட்டுமானப் பணிகளுக்கு இன்று அடிக்கல் நாட்டப்படுகிறது.

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் ஆட்சிப் பொறுப்பேற்ற பிறகு " அனைவருக்குமான வளர்ச்சி" என்ற நோக்கில்;, "எல்லோருக்கும் எல்லாம்" என்ற தத்துவத்தின் அடிப்படையில் நடைபெறும் திராவிட மாடல் ஆட்சியில், மீனவ மக்களின் வளர்ச்சியின் மீது கவனம் செலுத்தி, அதிக அளவிலான திட்டங்களை செயல்படுத்தி வருகிறார்கள்.

அந்த வகையில் கடந்த சில மாதங்களுக்கு முன் மயிலாடுதுறை மாவட்டம், தரங்கம்பாடி வட்டம், சந்திரபாடி கிராமத்தில் ரூ.10 கோடி மதிப்பீட்டில் மீன் விற்பனை மற்றும் ஏலக்கூடம் அமைக்கப்பெற்று, அதனை தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களே காணொலி வாயிலாக திறந்து வைத்தார்கள்.

இன்றைய தினம்; அடிக்கல் நாட்டப்பட்டு ரூ.32 கோடி மதிப்பீட்டில் மீன்பிடி இறங்குதளம் அமைக்கப்படும் போது, 1 லட்சம் கன மீட்டர் அளவுக்கு கடலில் உள்ள மணற்பரப்பு ஆழப்படுத்தப்படவுள்ளது. மேலும், இங்குள்ள ஆற்றின் இருபுறமும் சுமார் 320 மீட்டர் நீளத்திற்கு தடுப்புச் சுவரும், 60 மீட்டர் நீளத்திற்கு படகு அணையும் துறையும் அமையவுள்ளது. இந்த மீன்பிடி இறங்குதளம் கட்டி முடிக்கப்பெற்று பயன்பாட்டுக்கு வரும் போது, சந்திரபாடி பகுதியிலுள்ள மக்களுக்கு அது மிகவும் பயனுள்ளதாக இருக்கும்.

மேலும், மயிலாடுதுறை மாவட்டத்தில் உள்ள கடலோரப் பகுதிகளில் பல்வேறு வளர்ச்சித் திட்டப் பணிகளுக்காக, சட்டமன்ற உறுப்பினர்கள் சார்பில் முதலைமைச்சர் அவர்களிடம் கோரிக்கைகள் வைக்கப்பட்டுள்ளது. அனைத்து கோரிக்கைகளையும் பரிசீலனை செய்து முதலமைச்சர் அவர்கள் ஒவ்வொன்றாக நிறைவேற்றுவார்கள் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் அறிவித்து செயல்படுத்தி வரும் திட்டங்களில் முதன்மையான திட்டம் "கலைஞர் மகளிர் உரிமைத் தொகை" திட்டம் ஆகும். 1.17 கோடி மகளிருக்கு மாதம் ரூ.1000 வீதம் வழங்கி சாதனை படைத்து வருகிறார். இவ்வாறு தமிழ்நாட்டு மக்களின் வளர்ச்சிக்காகவும் முன்னேற்றத்திற்காகவும் எண்ணற்ற பல திட்டங்களை செயல்படுத்தி வரும் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கு அனைவரும் உறுதுணையாக இருக்க வேண்டும்" என இவ்வாறு பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அமைச்சர் சிவ.வீ.மெய்யநாதன் பேசினார்.

விழாவில் மீன்வளம் மற்றும் மீனவர் நலத்துறை சார்பில் பிரதம மந்திரி மீன்வள மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் 40 சதவீதம் மானியத்துடன் 9 பயனாளிகளுக்கு, தலா ரூ.75,681 வீதம் ரூ.6 லட்சத்து 81 ஆயிரத்து 129 மதிப்பிலான குளிர்காப்பு பெட்டியுடன் கூடிய இரு சக்கர வாகனங்களை பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் சிவ.வீ. மெய்யநாதன், வழங்கினார்.

விழாவில் மயிலாடுதுறை சட்டமன்ற உறுப்பினர் எஸ்.ராஜ்குமார், மாநில விவசாய அணி இணைச் செயலாளர் ஆர்.அருள் செல்வம், சட்டமன்ற முன்னாள் உறுப்பினர் எம்.எம். சித்திக், தலைமை செயற்குழு உறுப்பினர் ஜி. என். ரவி, மாவட்டக் கழக துணை செயலாளர் மு. ஞானவேலன், தகவல் தொழில்நுட்ப அணி தஞ்சை மண்டல பொறுப்பாளர் பி.எம்.ஸ்ரீதர், மயிலாடுதுறை நகர செயலாளர் குண்டாமணி ( எ ) என். செல்வராஜ், ஒன்றிய கழக செயலாளர் எம்.அப்துல் மாலிக், பி.எம்.அன்பழகன், அமிர்த. விஜயகுமார், மங்கை எம்.சங்கர், என். இளைய பெருமாள் ஞான. இமய நாதன், ப.முருகமணி பஞ்சு. குமார், பொதுக்குழு உறுப்பினர்கள் பி.சிவதாஸ், நத்தம் வின்சென்ட். தரங்கம்பாடி பேரூர் செயலாளர் முத்துராஜா, மாவட்ட வருவாய் அலுவலரநா. உமாமகேஷ்வரி, செயற் பொறியாளர் (மீன்பிடி துறைமுகத்திட்டக் கோட்டம், நாகை) து.ராஜ்குமார், உதவி செயற்பொறியாளர் (மீன்பிடி துறைமுகத் திட்டக் கோட்டம், பூம்புகார்) ஜெ.செந்தில்குமார், சந்திரப்பாடி மீனவ கிராம பஞ்சாயத்தார்கள் பாண்டுரங்கன், தலிங்கத்துரை, மீன்வளம் மற்றும் மீனவர் நலத் துறை உதவி இயக்குநர் . மோகன்குமார், சீர்காழி வருவாய் கோட்டாட்சியர் .சுரேஷ்;, தரங்கம்பாடி வட்டாட்சியர் மகேஷ் மற்றும் அரசு அலுவலர்கள் முன்னாள் உள்ளாட்சிப் பிரதிநிதிகள் கலந்து கொண்டனர்.

### எம்.எம்.சாமி தலைமை! விழுப்புரம் வி.சண்முகம் முன்னிலை!

# சலவை தொ.மு.ச. பொதுக்குழு உறுப்பினர்கள் கூட்டம் !

## அடையார் நா.அசோகன், மதுரை சி.நாகராஜ் வரவேற்புரை!

சென்னை, பிப்.15-

தமிழ்நாடு சலவைத் தொ.மு.சங்கம் சார்பாக (தொ.மு.ச.) பேரவையுடன் இணைக்கப்பட்டது. சலவை தொ.மு.ச. பொதுக்குழு உறுப்பினர்கள் கூட்டம் 27.01.2025 திங்கட்கிழமை அன்று காலை 10.00 மணியளவில் இராயபுரம் ரீபேலஸ் திருமண மாளிகை, சென்னை 13ல் நடைபெற்றது.

கூட்டத்தில் மாநிலத் தலைவர் நெல்லை எம்.எம். சாமி தலைமையிலும் பொதுச்செயலாளர் சலவை தொ.மு.ச.விழுப்புரம் வி.சண்முகம் முன்னிலையிலும் அடையார் நா.அசோகன், மதுரை சி.நாகராஜ், ஆகியோர் வரவேற்றனர்.

இதில் சௌந்தரபாண்டி, முருகன், கே.முருகேசன், சேகர், பி.பாஸ்கர், எஸ். கோபால்கிருஷ்ணன், எஸ். செந்தில், எஸ்.ராஜேஷ், திலிப், எஸ்.சுரேஷ், முனுசாமி, க.விநாயகம், அ.தமிழ் செல்வன், அ.சாந்தி, முருகதாஸ், ப.விஜயரா கவன், கே.குணாளன், எஸ்.சேகர், எஸ்.சுப்பிரமணி, ஆர்.ரவி, சுப்புராஜ், கார்த்திக், பி.டில்லிபாபு, வி.வீரன், என்.கே. மணிகண்டன், எம்.வேலன், கே.ராணி, ஆர்.முருகன், ஆர்.சரவணன், இ.சி.அன்பழகன், கே.முரளி, எம்.ராஜ்குமார், சி.கே.முனுசாமி, பி. கே.மோகன், எஸ்.சௌந்தரராசன், என்.நாகேஷ், சி.கே. ஆனந்தன், மு.சிவகுமார், ஆர்.செந்தில், எம்.சீனிவாசன், வெங்கட்ராஜ், ஜி.மோகன், எஸ்.பாபு, எஸ்.பி.சந்தனராஜ், கே. இந்திரஜித், ஏ.சின்னதுரை, பி.கார்த்தி, எஸ். அமிர்த்தவள்ளி, பி.கதிர் வேல், ஆர்.லட்சுமணன், ஏ. மணி மாறன், எஸ். சுப்பிரமணி, எம்.பிரேமா, எம்.ரமேஷ், டி.கருணாகரன், எம்.ஜீவரத்தினம், சி.உஷா ராணி, பி.பழனி, ம.செல்வம், கே.ராமச்சந்திரன், வெ.ஆவுடையப்பன், ஜி.போஸ், வி.மாரியப்பன், ஆர்.முருகன், ஜி.ஹரிகிருஷ்ணன், வி. அமுதா, ஏ.லட்சுமி, பாக்கியம், எஸ்.ஈஸ்வரன், எஸ்.சுரேஷ்குமார், மற்றும் பலர் பங்கேற்றனர்.

கூட்டத்தில் நிறை வேற்றப்பட்ட தீர்மானங்கள் வருமாறு;

தமிழ்நாட்டில் உள்ள சலவைத் தொழிலாளர் என்ற பெயரினை நீக்கி அரசாணை வெளியிட்டமைக்கு தமிழக முதல்வர் அவர்களுக்கு நன்றி தெரிவித்துக் கொள்கிறோம்.

தமிழ்நாட்டின் வளர்ச்சியிலும் தமிழ்நாடு மக்களின் நலனினும் முழுமுயற்சியுடன் சிறப்பாக செயல்பட்டு கொண்டிருக்கும் தமிழ்நாடு துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அவர்களை வணங்கி பாராட்டுகின்றோம்.

ஒன்றிய அரசு கடந்த (12.05.1976)ம் ஆண்டு கொண்டு வந்த சட்ட திருத்தலில் (Aamendent) வண்ணார் ஜாதியும் இடம் பெற்றுள்ளது. அதில் வண்ணார் ஜாதி பிரிவானது தமிழ்நாட்டில் கன்னியாகுமாரி மாவட்டம் முழுவதும் மற்றும் செங்கோட்டை தாலுகாவில் மட்டும் தாழ்த்தப்பட்டோர் பட்டியலில் அட்டவனை தமிழகம் முழுவதும் விரிவுபடுத்தி பட்டியல் அட்டவனையில் இணைக்க வேண்டுமென இக்கூட்டம் வலுயுறுத்திகின்றது.

மீனவர்கள் மற்றும் மண்பாண்டம் தொழில் செய்பவர்களுக்கு மழைகாலங்களில் நிவரண தொகை வழங்குவது போல் துணி துவைக்கும் தொழிலாளர்களும் நிவராணம் வழங்க வேண்டும் உள்ளிட்ட பல்வேறு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டது.




பெரம்பலூர் மாவட்ட தி.மு.க.சார்பில், மத்திய பா.ஜ.க. மோடி அரசைக் கண்டித்து, குன்னம், கலைஞர் திடலில் கண்டன பொதுக்கூட்டம் நடைபெற்றது. மாவட்ட கழக பொறுப்பாளர் வீ.ஜெகதீசன் தலைமையில் நடைபெற்ற இப்பொதுக்கூட்டத்தில் தகவல் தொழில் நுட்ப அணி மாநில ஆலோசகர் கோவி.லெனின் மாநில கொள்கை பரப்பு இணைச் செயலாளர் புதுக்கோட்டை விஜயா ஆகியோர் கலந்து கோண்டு சிறப்புரையாற்றினார்கள். இதில் பெரம்பலூர் சட்டமன்ற உறுப்பினர் எம். பிரபாகரன், மாநில ஆதிதிராவிடர் நலக்குழு துணைச் செயலாளர் பா.துரைசாமி, முன்னாள் மாவட்ட கழகச் செயலாளர் குன்னம் சி.இராஜேந்திரன், மாநில பொறியாளர் அணி துணைச் செயலாளர் இரா.ப.பரமேஷ்குமார், தலைமைச் செயற்குழு உறுப்பினர் வழக்கறிஞர் என்.ராஜேந்திரன், பொதுக்குழு உறுப்பினர்கள் எஸ்.அண்ணாதுரை, பட்டுச்செல்வி ராஜேந்திரன் உள்ளிட்ட ஏராளமான கழகத்தினர் கலந்து கொண்டனர். மாவட்ட மருத்துவ அணி அமைப்பாளர் டாக்டர் அ.கருணாநிதி நன்றியுரையாற்றினார்.